# ஸ்ரீ வித்யபாரதி
# மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,

சக்கராம்பாளையம், அகரம் (PO),எலச்சிப்பாளையம்
திருச்செங்கோடு (TK) நாமக்கல்(DT) 637202.
Cell :99655-31727, 94432-31727

## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச் - 2025
## *TENTATIVE ANSWER KEY (03.03.2025)*

வகுப்பு – 12 - பொதுத்தமிழ்

**கால அளவு :3.00 மணி நேரம் மதிப்பெண் :90**

| வ.எண் | விடை | மதிப்பெண் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | பகுதி - I | | |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | | |
| 1. | அ) தொல்காப்பியம் | 1 | 14 |
| 2. | அ) மறைமலை அடிகள் | 1 | |
| 3. | அ) தொல்காப்பியம் | 1 | |
| 4. | ஆ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது | 1 | |
| 5. | ஈ) (1) – (iii), (2) – (iv), (3) – (i), (4) – (ii) | 1 | |
| 6. | இ) தந்தை வழிச் சமூகமுறை | 1 | |
| 7. | அ) இசைக்கருவி | 1 | |
| 8. | ஈ) வினைப்படிமம் | 1 | |
| 9. | ஈ) மழை | 1 | |
| 10. | ஆ) கரந்துவரல் திரை | 1 | |
| 11. | இ) மகிழ்ச்சி | 1 | |
| 12. | ஈ) காண்டம் | 1 | |
| 13. | ஈ) வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர்! | 1 | |
| 14. | ஆ) பாடாண் திணை | 1 | |
| | பகுதி – II பிரிவு - 1<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | 3x2=6 |
| 15. | **குளிர்காலத்தில் பறவைகளும் விலங்குகளும் நடுங்கியதாக நக்கீரர் கூறுவன:**<br>❖ விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்தலைமறந்தன.<br>❖ குரங்குகள் நடுங்கின.<br>❖ மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.<br>❖ பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. | ½<br>½<br>½<br>½ | 2 |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 16. | **செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன**<br>❖ ஒருவருடைய செல்வம் குறையாமலிருக்க வழி எது என்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும். | 2 | 2 |
| 17. | **நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது -**<br>❖ தொடர்ந்து மழை பொழிந்துகொண்டிருக்கும் மழைக்காலம் அது.<br>❖ அப்போது, மேகங்களை விலக்கிக் கொண்டு சூரியன் தோன்றியதால், அதுவரை மழைமேகத்தால் மறைக்கப்பட்டிருந்த சூரியக்கதிர்களின் வெண்ணிற ஒளி எங்கும் பரவி ஒளிரத் தொடங்கியது.<br>❖ அதனால், மழையால் ஏற்பட்ட இருளால் சூழப்பட்டிருந்த நகரம், பட்டை தீட்டப்பட்ட வைரம் போல 'வெள்ளை வெளேர்' என்று பளிச்சென்றிருந்தது. | ½<br>1<br>½ | 2 |
| 18. | "உவா உற வந்து கூடும்<br>உடுபதி, இரவி ஒத்தார்"<br>**இடம்:** கம்பராமாயணப்பாடலில் "கிட்கிந்தா காண்டத்தில்", நட்புக்கோர் படலத்தில் இடம்பெற்றுள்ளது.<br>**ஆசிரியர்:** கம்பர்<br>**பொருள்:** அமாவாசை காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கின்ற சந்திரனையும், சூரியனையும் ஒத்திருந்தார்கள்.<br>**விளக்கம்:** குறையாத வலிமை உடையவர்களும் வேண்டாத இருள்போன்றவர்களுமாகிய பகைவர்களை அழித்துர் அறங்கள் அனைத்தையும் நிலைபெறச் செய்வதற்கு ஏற்ற உரிய காலம்போல் இராமனும் சுக்ரீவனும் ஒருங்கிருந்தார்கள். ஆசையை அறவே அழித்த சிந்தையான் இராமனும், வனரத்தலைவன் சுக்ரீவனும்அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருந்தார்கள். | 1<br>1 | 2 |
| | பிரிவு - 2<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x2=4** |
| 19. | **'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக வலியுறுத்துவது**<br>❖ 'ஆளுக்கொரு மரம் வளர்த்தால்' ஊர் முழுக்க மரங்கள் நிறைந்து, பசுமை பொலியும்.<br>❖ அம்மரங்கள், காற்று மண்டலத்தின் ஈரம் குறையாமல் காத்து மேகங்களை மழை பொழியச்செய்யும்.<br>❖ அவ்வாறு பொழியும் மழைநீர், காற்று மண்டலத்தில் பரவியுள்ள மாசுகளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு நிலத்தில் விழும்; அதனால் அவ்விடத்திலுள்ள காற்று தூய்மையுறும்.<br>❖ மரங்கள் மண்ணரிப்பைத் தடுக்கின்றன.<br>❖ இம்மரங்கள் பகலில் ஒளிச்சேர்க்கை என்னும் நிகழ்ச்சியால் கரிமக்காற்றை உட்கொண்டு, ஏனைய உயிரினங்களின் இயக்கத்திற்கு இன்றியமையாத உயிர்க்காற்றை வெளியிடுகின்றன. இதனால் காற்றின் தூய்மை பாதுகாக்கப்படுகின்றது என்பவற்றை வலியுறுத்துவேன்.<br>**(ஏற்புடைய விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | ½<br>½<br>½<br>½ | 2 |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 20. | **பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மை:**<br>❖ உரிய நேரத்தில் விதைத்தல், சரியான காலத்தில் நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல் என்ற ஒவ்வொரு செயலையும் திட்டமிடுதல் பயிருக்கு அவசியமானதாகும்.<br>❖ இதையே நம் முன்னோர் பருவத்தே பயிர் செய் என்று தம் அனுபவத்தால் சொல்லி வைத்தனர்.<br>❖ பருவம் என்பது பயிருக்கு மட்டுமன்று, மனித குலத்துக்கும் மிகவும் அவசியமானதாகும்.<br>❖ பள்ளிக்குச் செல்வது, பணிக்குச் செல்வது, இல்லறம் தொடங்குவது போன்றவற்றை உரிய நேரத்தில் தேர்ந்தெடுக்க வில்லையெனில் வெற்றி கிடைக்காமல் போய்விடுகிறது.<br>❖ ஏற்ற காலம் அறிந்து ஏற்ற இடத்தைத் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும் என நேர மேலாண்மை குறித்து வள்ளுவர் குறிப்பிடுகிறார்.<br>**(ஏற்புடைய விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | ½<br>½<br>½<br>½ | 2 |
| 21. | **சேய்மைக் காட்சித் துணிப்பு:**<br>பேருந்தைப் பிடிக்க, சாலையைக் கடக்கும்போது சாலைகளின் இருபக்கங்களிலும் பார்க்கிறோம். அப்போது நம் கண்கள் இன்னும் கொஞ்சம் சுருங்கி, பொருள்கள் அசைவதைத் தொலைவிலிருந்து பார்த்துப் பதிவு செய்கின்றன. திரைபடத்தில் இதனைச் சேய்மைக் காட்சித் துணிப்பு எனலாம். | 2 | 2 |
| | பிரிவு - 3<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | | **7x2=14** |
| 22. | **முடிந்தால் தரலாம்: - இயன்றால் தரலாம்**<br>❖ உன்னிடம் உள்ள பொருள்களைக் கொண்டு ஏழைகளுக்கு உதவ **முடிந்தால் தரலாம்.**<br>**முடித்தால் தரலாம்: - நிறைவு செய்த பின் தரலாம்.**<br>❖ என் வீட்டின் திறவுகோல், வேலையை **முடித்தால் தரலாம்.** | 1<br>1 | 2 |
| 23. | **கிணற்றுத்தவளைபோல - (வெளி உலகம் தெரியாத நிலை, உலக அறிவின்மை)**<br>❖ பள்ளிக்கூடங்களில் பயிலும்போது பாடப்புத்தகங்களை மட்டும் படித்துக் **கிணற்றுத்தவளை போல** அல்லாமல், அவ்வப்போது நூலகங்களுக்கும் செல்ல வேண்டும். | 2 | 2 |
| 24. | **மணம்** - வாசனை, **மனம்** - உள்ளம்<br>பூக்களின் மணத்தை நுகர்ந்த என் மனம் மகிழ்ந்தது<br>**(பொருத்தமான விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 2 | 2 |
| 25. | **சரியான தொடர்:**<br>❖ திருவளர்செல்வன்<br>❖ திருவளர்செல்வன் என்பது வினைத்தொகை<br>**இலக்கண விதி:**<br>❖ வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது. | 1<br>1 | |
| 26. | அ) **காலையில்** எழுந்து **படித்தால்** நமக்கு **நன்மைகள்** ஏற்படும்.<br>ஆ) **சான்றோர்க்கு** மதிப்புக் **கொடுத்தால் வாழ்வில்** உயரலாம். (அ) **சான்றோர்க்கு** மதிப்புக் **கொடுத்து வாழ்ந்தால் வாழ்வில்** உயரலாம். | 1<br>1 | 2 |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 27. | அ) **வெங்காயம் - உணவுப்பொருள்**<br>❖ வெங்காயம் விலை சற்றே கூடுதலாக விற்றது.<br>**வெம் காயம் - பெரிய காயம்**<br>❖ வெம் காயம் பெற்ற வீரர்கள் பாசறையில் தங்கினர்.<br>ஆ) **அந்தமான்**<br>❖ அந்தமான் - தீவு<br>நான் எனது நண்பருடன் அந்தமான் தீவிற்கு சென்றேன்.<br>❖ **அந்த மான் - தொலைவில் உள்ள மானைச் சுட்டுவது**<br>காட்டில் உள்ள அந்த மானை வேட்டையாட என் மனம் விரும்பவில்லை. | 2 | 2 |
| 28. | **அ)** Artist - கவின்கலைஞர்<br>**ஆ)** Subscription - உறுப்பினர் கட்டணம் | 1<br>1 | 2 |
| | **குறிப்பு:செவி மாற்றுத்திறனார்களுக்கான மாற்றுவினா**<br>**வீட்டிற்கு (வீட்டின்) அருகில்** விளையாடிய குழந்தையை அப்பா எங்கு **இழுத்துக்(அழைத்துக்)** கொண்டு போனார். | 2 | 2 |
| 29. | **அ) அருங்கானம் - அருமை + கானம்**<br>விதி 1 : ஈறுபோதல் - அரு + கானம்<br>விதி 2 : இனமிகல் - அருங்கானம்<br>**ஆ) ஏழையென = ஏழை + என**<br>விதி 1: இ ஈ ஐ வழி யவ்வும்<br>விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஏழையென | 2<br><br>2 | 2 |
| 30. | **அ) சாற்றி = சாற்று + இ**<br>சாற்று - பகுதி<br>இ - வினையெச்ச விகுதி<br>**ஆ) தொழுதனர் = தொழு+த்+அன்+ஆர்**<br>தொழு - பகுதி<br>த் - இறந்தகால இடைநிலை<br>அன் - சாரியை<br>அர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி | 1<br>1<br><br>1<br>1 | 2 |
| | **பகுதி – III பிரிவு - 1**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 31. | **நாட்டுப்புறப்பாடல்:**<br>❖முறையான ஏட்டுக்கல்வி பயிலாதவர்கள், உழவர்கள். இயற்கையே அவர்களின் பாடப்புத்தகம். ஒவ்வொரு நாளும் காணும் காட்சியே, பாடம். அக்காட்சிவழி கற்கின்ற அனுபவமே, அவர்கள் பெறும் அறிவு.<br>❖இதோ, உழவன் ஒருவன், புலர்காலைப்பொழுதில், ஏரைத் தோளில் சுமந்துகொண்டு, இரு உழவு மாடுகளையும் ஓட்டிக்கொண்டு தன் நிலம் நோக்கிச் செல்கிறான். செல்லும் வழியில் எத்தனையோ காட்சிகளை அவன் இருவிழிகள் படம் பிடித்துக்கொண்டு செல்கின்றன. அப்படிச் செல்லும்போது ஒரு காட்சி அவனை ஈர்த்து நிறுத்துகிறது.<br>❖வழியில் ஒரு மூங்கில் வளர்ந்திருக்கிறது. அந்த மூங்கிலின் இலைமீது முத்துப்போல வெண்ணிறப் பனித்துளி படிந்திருக்கிறது.<br>❖'இப்பனித்துளி, கதிரவன் தோன்றியதும் என்னவாகும்? வெண்ணிறமான வெப்பக்கதிர்களால் உறிஞ்சப்பட்டுவிடும்' எனச் சிந்திக்கிறான் உழவன். உடனே யாப்பிலக்கணம் படித்தறியாத அவ்வுழவனின் உள்ளத்தில் எதுகை மோனையோடு, இயல்பாகப் பாடல் ஒன்று உருவெடுத்து,<br>**"மூங்கில் இலைமேலே**<br>**தூங்கும் பனிநீரே!** | ½<br><br>2<br><br>½<br><br>½<br><br>½ | 4 |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | **தூங்கும் பனிநீரை**<br>**வாங்கும் கதிரோனே!** என அவன் வாய்வழியே உதிர்கிறது.<br>**அய்யப்ப மாதவன் கவிதை:**<br>❖ இதே பாடற்கருத்தின் தொடர்ச்சியாய் அய்யப்பமாதவனின் பாட்டில்<br>❖ **"நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்"** என அமைந்துள்ளதை அறிந்து மகிழ்கிறோம்.<br>❖ ஆம்; எங்கும் இருள் சூழும்வண்ணம் கருமேகங்கள் கொட்டிய மழை நின்றுவிட்டது. அதனால், தன் வெண்ணிறக் கதிர்கள் என்னும் உதடுகளால் நீர் நிலைகளிலிருந்து நீரை உறிஞ்சி, ஆவியாய் மேலே எழும்பச் செய்கிறான் கதிரவன் என்கிறார், அய்யப்ப மாதவன்.<br>❖ இவ்விரு கவிஞர்களும் சொல்லுகின்ற கவிவடிவமும் நிகழிடமும் வேறுபட்டாலும், கருத்து ஒருநிலைப்பட்டிருக்கும் கவிநயம் கண்டு மகிழ்வோம்.<br>**(ஏற்புடைய விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| 32. | **குகனோடு ஐவராதல்:**<br>❖ இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே என்று குகன் வருந்தினான். அதை உணர்ந்த இராமன் கூறுகிறான். குகனே! துன்பம் என்று ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும்.<br>❖ துன்பத்திற்குப் பின் இன்பம் உறுதியாக உண்டு. நமக்கிடையே இப்போது இப்பிரிவு நேர்கிறது என்று எண்ணாதே.<br>❖ அடுத்து, இராமனைக் கங்கையின் தென்கரையினில் இறக்கிவிட்ட குகன், தானும் உடன்வந்து தொண்டு செய்வதாய்க் கூறினான். இவ்வாறு, குகனின் அடுத்தடுத்து முடிவிலாத அன்பின் செயல்களால் நெகிழ்ச்சியுற்ற இராமன், "உன்னைக் காண்பதற்குமுன் நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாய் இருந்தோம்; நாம் இனிமேல் ஐவரானோம்," என்று பேரன்புடன் கூறினான்.<br>**சுக்ரீவனோடு அறுவராதல்:**<br>❖ சுக்ரீவன் இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பினால் சீதையைத் தேடி இலங்கை சென்றான்.<br>❖ இராவணனைக் கொன்று வருவதாகக் கூறிச் சென்றவன் அவன் மணிமுடியை மட்டும் கொண்டு வந்தான்.<br>❖ இராமன் மீது அவன் கொண்ட அளவற்ற அன்பைக் கண்டு நீ, என் இனிய உயிர் நண்பன் என்று கூறி, நால்வராக இருந்த நாங்கள் குகனுடன் சேர்த்து ஐவரானோம்.<br>❖ மேருமலையைச் சுற்றிவரும் கதிரவனின் மகனான உன்னையும் இணைத்து ஆறுபேர் ஆனோம் என்றான்.<br>**வீடணனோடு எழுவராதல்:**<br>❖ சீதையைக் கவர்ந்து வந்த செயல் தவறு என்று கூறியதற்காக வீடணனை இராவணன் கடிந்தான்.<br>❖ இலங்கையை விட்டு வந்த வீடணன் இராமனிடம் அடைக்கலம் வேண்டினான்.<br>❖ அதன் விளைவாக, இராமன் அவனை உடன்பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசினை அவனுக்கு உரிமையாக்கினான். குகனுடன் ஐவர், சூரியனின் மகன் சுக்ரீவனுடன் ஆறுபேர், உன்னையும் சேர்த்து எழுவர் ஆனோம். | 1<br><br>1<br><br>1<br><br>1 | 4 |

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 33. | **வியப்பு :**<br>❖ நீண்ட நாளாக எனக்குக் கால்முட்டியில் வலி தீரவில்லை. என் உறவுக்காரர் பக்கத்து ஊர் தர்காவில் மௌலவி(மத போதகர்) ஒருவர் வேதம் ஓதுகிறார்.<br>❖ உடல் நோயெல்லாம் தீர்ந்து விடுகிறது போய் பார் என்றார்.<br>❖ நம்பிக்கையோடு சென்றேன். வரிசையில் நின்றேன். என் முறை வந்தது. ஒரே வியப்பு! அழுகையும் வந்தது. அங்கே ஓதுகின்ற மௌலவி என் வாப்பா (தந்தை). வெட்கமும் வேதனையும் வந்தது. வாப்பாவிடம் இப்படியொரு மகத்துவமா!.<br>**பெருமை :**<br>❖ 2004ஆம் ஆண்டு கடலூரில் சுனாமியால் பாதிக்கப்பட்டுத் தன் தாய் தந்தையரை இழந்து அனாதையாக அரசுக் காப்பகத்தில் சேர்க்கப்பட்டாள்.<br>❖ அந்தப் பெண் குழந்தையை மாரியப்பன் என்ற உடற்கல்வி ஆசிரியர் இனங்கண்டு அரசு உதவியோடு தன் இல்லத்திற்கு அழைத்துவந்து தன் குழந்தைபோல் வளர்த்தார்.<br>❖ கல்வியோடு சேர்ந்து கால் பந்திலும் அந்தப் பெண்ணை ஈடுபடுத்தினார்.<br>❖ பட்டம் முடித்த அந்தப் பெண் கால் பந்தில் முழுக் கவனம் செலுத்தி ஆசிய அளவில் நடைபெற்ற கால்பந்துப் போட்டியில் இந்திய அணி சார்பில் விளையாடி வெற்றி பெற்றாள்.<br>❖ தன் தாய் தந்தையரை இழந்தாலும் வளர்ப்புத் தந்தையால் அடையாளம் கண்டு அவருக்கும் கடலூர் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தாள்.<br>**(குறிப்பு: ஏற்புடைய விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 | |
| 34. | **இடம்:**<br>'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் நூலில் எச்.ஏ. கிருட்டிணனார் இயற்றிய 2 ஆம் பருவமான குமார பருவத்தில் இவ்வடி இடம் பெற்றுள்ளது. கொடியவர்கள் இறைமகன் மீது பகை கொண்டு அவருக்கு இழிவான செயல்களைச் செய்தனர். அப்போது இறைமகனின் நிலையை நூலாசிரியர் கூறுகையில், 'ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' எனக் கூறுகிறார்.<br>**பொருள்:**<br>எந்த உதவியும் பெற இயலாத ஏழை ஒருவனைப் போல இறைமகன் அமைதியுடன் நின்றார். இதனை எண்ணிப்பாருங்கள்.<br>**விளக்கம்:**<br>பகைவர்கள் இறைமகனைக் கயிற்றால் கட்டும்போது அதற்கு அவர் உடன்பட்டு நின்றார். தமக்கு இழிவான செயல்களைச் செய்த இம்மனிதர்கள் 'காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களோ' என்று எண்ணி அவர்களுக்காக இரக்கப்பட்டு, அன்பு என்னும் உறுதியான கட்டிலிருந்து விடுபட முடியாமல், தாம் எந்த உதவியும் பெற இயலாத ஓர் ஏழையைப் போல அமைதியுடன் நின்றார். இதை எண்ணிப் பாருங்கள் என்கிறார், ஆசிரியர். | 1<br>1<br>2 | 4 |
| | **பிரிவு - 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 35. | **இயற்கைக்கு எதிராய்ச் செயல்படாதீர்:**<br>❖ இயல்பாகவே பெருமழைக்குத் தாங்கக்கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வாய்க்கால், வெள்ளச்சமவெளிகள் | | 4 |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | போன்ற ஏற்பாடுகளை இயற்கை அமைத்திருக்கிறது. அவற்றைச் சேதப்படுத்தாமல் முறையாகத் தூர்வார்தல் வேண்டும்.<br>❖ நாம் இந்த அமைப்பில் இடையீடு செய்து, நீர்நிலைகளை அழித்துக் குடியிருப்பு, தொழிற்சாலை, கல்வி நிறுவனம் போன்றவற்றை உருவாக்கக்கூடாது.<br>❖ நெகிழி, திடக்கழிவு ஆகியவற்றைக் கொட்டி, நீர்வழிப்பாதைகளைக் குறுக்கி, வெள்ளச்சமவெளிகள் இல்லாமல் செய்துவிடக்கூடாது.<br>**அளவோடு மணலை அள்ளுக:**<br>❖ நிலத்தடி நீர்மட்டம் வெகுவாய்க் குறையும் வகையில் குறிப்பிட்ட அளவையும் கடந்து ஆற்றில் மணலினை எடுத்துப் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது.<br>**முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியவை:**<br>❖ வடிகால் வசதியை மேற்கொள்ளல் வேண்டும்.<br>❖ சூறாவளி, புயல், வெள்ளம் குறித்த போதிய விழிப்புணர்வை அனைத்துப் பொதுமக்களும் பெரும் விதத்தில் பேரிடர் மேலாண்மை ஆணையம் முயற்சி மேற்கொள்ளல் வேண்டும்.<br>❖ பேரிடர்க் காலங்களில் தாங்கக்கூடியவையாகப் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.<br>❖ நீர்வழிப் பாதைகளுக்கானத் தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.<br>❖ கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக்காடுகள் வளர்த்தல் வேண்டும். | 1<br>1<br>1<br>1 | |
| 36. | **என் பொறுப்பு:**<br>என் பெற்றோர்கள் இருவருமே இன்றைய பொருளாதாரத் தேவைகளைச் சமாளிக்க, வேலைக்குச் செல்ல வேண்டிய தேவை உள்ளது என்பதை உணர்ந்து செயல்படுவேன்.<br>தங்கள் நலனை மறந்து எங்கள் நலனுக்காகவே பாடுபடும் பெற்றோர்களிடம் அன்புடனும் பாசத்துடனும் நடந்து கொள்வேன்.<br>**உடன் பிறந்தோர்க்கு உதவுவேன்:**<br>என் பெற்றோர்கள் வரும்வரை என் தம்பி, தங்கைக்குக் கதைகள் கூறி விளையாட்டுக் காட்டி அன்போடு கவனித்துக் கொள்வேன்.<br>ஆடம்பரமான பொருட்கள் அவர்களிடம் கேட்பதைத் தவிர்ப்பேன். மிகவும் தேவையான பொருளை மட்டும் கேட்பேன்.<br>**தாய்க்கு உதவுவேன்:**<br>என் தாய் வேலை முடித்துத் திரும்பி வருவதற்குமுன் வீட்டைத் தூய்மைப்படுத்தி தேநீர் தயாரித்து வைப்பேன்.<br>கடைக்குச் சென்று காய்கறிகள் வாங்கி வருதல், வாகனத்தைச் சுத்தம் செய்தல் போன்ற என்னால் இயன்ற பணிகளைச் செய்து பெற்றோருக்கு உதவியாக இருப்பேன்.<br>வீட்டுத் தோட்டத்தைப் பராமரிப்பேன்.<br>வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி வந்து அம்மாவிடம் கொடுப்பேன்.<br>**என் பணிகளை நானே முடிப்பேன்:**<br>என் பள்ளிப்பாடங்களை அன்றாடம் படித்து முடிப்பேன்.<br>என்னுடைய உடைகளை நானே துவைத்துக் கொள்வேன்.<br>என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து கொள்வேன். | 1<br>1<br>1<br>1 | |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 37. | **சென்னையின் புகழுக்குச் சான்றாக நிற்கும் கல்வி நிறுவனங்கள்:**<br>❖ 18ஆம் நூற்றாண்டிலேயே ஐரோப்பிய முறைக் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின.<br>❖ 1715 - புனித மேரி தேவாலய தர்மப்பள்ளி (ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும்.)<br>❖ 1812 - சென்னைக் கோட்டைக் கல்லூரி<br>❖ 1837 - கிறித்தவக் கல்லூரி<br>❖ 1840 - பிரசிடென்சி கல்லூரி (மாநிலக் கல்லூரி)<br>❖ 1857 - சென்னைப் பல்கலைக்கழகம்<br>❖ 1914 - இராணிமேரி கல்லூரி<br>❖ இவை மட்டுமல்லாமல் ஆங்கிலேயரின் உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி.<br>❖ மேலும், மருத்துவக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி, மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி எனச் சென்னை நகரின் கல்விக் கூடங்கள் பலவும் தமிழ்ச் சமூகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தின. | 4 | 4 |
| 38. | **மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**<br>❖ மயிலை சீனி. வேங்கடசாமி 16-12-1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.<br>❖ தந்தையின் சித்த மருத்துவப் பின்புலமும், தமையனாரின் தமிழ்ப் பின்புலமுமே சீனி. வேங்கடசாமியை வரலாற்று ஆய்வாளராய் உருவாக்கியது.<br>❖ 25 ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியராய்ப் பணியாற்றினார். விபுலானந்த அடிகள், கா. சுப்பிரமணியர். திரு.வி.க., தெ.பொ.மீ., ச.த. சற்குணம் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாய்ப் பல்வேறு இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைகள் வெளியாயின.<br>❖ ஓயாத தேடலினாலும், கடுமையான உழைப்பாலும் அரிய ஆய்வுகள் வெளிக்கொணர்ந்த மாமனிதருக்குச் சென்னை கோகலே அரங்கில் மணிவிழா எடுத்து ‘ஆராய்ச்சிப் பேரறிஞர் என்ற பட்டமும் வழங்கப்பட்டது.<br>❖ தமிழ்த் தேனீ என்றால் நம் மயிலை சீனியைத் தான் குறிக்கும்.<br>❖ சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு எனப் பல துறைகளில் நூல்களைப் படைத்தவர்.<br>❖ மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்சி பெற்றிருந்தார்.<br>❖ திருமணமே செய்துகொள்ளாமல் இல்லறத்துறவியாய் வாழ்ந்து, தம் வாழ்வை முழுமையாய்த் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்.<br>❖ தமிழில் ‘தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்’ குறித்து முழுமையான நூல் வெளியிட்டார்.<br>❖ இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல் ஆகும்.<br>**(ஏதேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | 4 |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு - 3<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x4=12** |
| 39. | அ) **அணி இலக்கணம் :**<br>இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.<br>**சான்று :**<br>**"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள் மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது தன்னேர் இலாத தமிழ்!"** என்ற தண்டி எழுதிய தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல் இத்திணைக்குச் சான்றாகும்.<br>**சான்று விளக்கம்:**<br>**சூரியன்:** 1. உதயகிரியில் தோன்றுதல் 2. மேன்மக்களால் தொழப்படுதல் 3. இருள் அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடையது.<br>**தமிழ்:** 1.பொதிய மலையில் தோன்றியமை 2. அறிவுடையோர் தொழுதேத்தும்படி விளங்குதல் 3. அறியாமை இருளை அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடைய தமிழ்மொழிக்கு நிகராக எம்மொழியும் இல்லை.<br>**அணிப்பொருத்தம்:**<br>கதிரவனும், தமிழ்மொழியும் மலையில் தோன்றுகின்றன என ஒப்புமையைக் கூறி, அவற்றுள் தமிழ்மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இவ்வுலகில் இல்லை என்று வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் பொருள் வேற்றுமையணி ஆகும்<br>**கதிரவன் - புற இருளை அகற்றும்; தமிழ்மொழி - அக இருளை அகற்றும்** | 2<br>1<br>1 | 4 |
| | ஆ) **அணிச்சுட்டல்:**<br>**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்"** - இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வரு நிலையணி பயின்று வந்துள்ளது.<br>**அணி இலக்கணம் :**<br>செய்யுளில் முன்னர் வந்த சொல் அதே பொருளில் பின்னர் பலமுறை வருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.<br>**சான்று விளக்கம்:**<br>எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.<br>**விளக்கம் :**<br>இக்குறட்பாவில் 'எண்ணிய' என்ற சொல் 'நினைப்பது' என்ற பொருளில் பலமுறையில் வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும். | 1<br>2<br>1 | 4 |
| 40. | **இலக்கிய நயம் பாராட்டல்**<br>மையக்கருத்து, திரண்ட கருத்து<br>எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தம், சுவை<br>**(மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 41. | அ) **பாடாண் திணை**<br>**திணை இலக்கணம்:**<br>ஒருவருடைய புகழ் வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும். | 2 | **4** |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | **சான்று :**<br>**'காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே'** எனத் தொடங்கும் பிசிராந்தையார் எழுதிய புறநானூற்றுப்பாடல் இத்திணைக்குச் சான்றாகும்.<br>**சான்று விளக்கம்:**<br>ஒரு மாவிற்கும்(ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கிற்கும்) குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும்.<br>**திணைப் பொருத்தம்:**<br>அறிவுடை வேந்தன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால், நாடு கோடிக் கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும் எனப் பிசிராந்தையார் கூறுகிறார். இவ்வாறு ஒரு மன்னனின் ஆட்சிமுறையை வலியுறுத்திக் கூறுவதால் இது பாடாண் திணைக்குப் பொருத்தமானதாக அமைகிறது.<br>**(பொருத்தமான சான்றுகளுடன் விளக்கம் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>1 | |
| | **(அல்லது)**<br>**ஆ) கூதிர்ப்பாசறைத் துறை:**<br>**துறை விளக்கம் :**<br>கூதிர்ப்பாசறை என்பது போர்மேற்கொண்ட அரசன் குளிர்காலத்தில் தாங்கும் படைவீடாகும்.<br>**சான்று :**<br>**"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**<br>**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென....."**<br>-என்ற மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் எழுதிய நெடுநல்வாடைப் பாடல் இத்துறைக்குச் சான்றாகும்.<br>**துறைப் பொருத்தம் :**<br>வாடைக் காலத்தில் மேகம் மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழைப் பெய்தது. வாடைக்காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். அவர்களோடு போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு கூதிர்ப்பாசறை. | 2<br><br>1<br><br>1 | **4** |
| 42. | **வாழ்க்கை நிகழ்வில் பழமொழி**<br>பழமொழி விளக்கம்<br>வாழ்க்கை நிகழ்வில் பழமொழி (கதை)<br>அறியும் கருத்து (நீதி)<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>3 | **4** |
| 43. | 1) கோபால கிருஷ்ண பாரதியார்.<br>2) தாது வருடப் பஞ்சம்<br>3) பிரதாபமுதலியார் சரித்திரம்<br>4) ஒரு கோடி மக்கள் தாது வருடப் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். | 1<br>1<br>1<br><br>1 | 4 |

Padasalai.Net

| | பகுதி –IV<br>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். | | 3x6=18 |
|---|---|---|---|
| 44. | **அ) முன்னுரை:**<br>**“எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!”**<br>தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீளம்; காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது. அத்தகைய தமிழின் பெருமையைப் பேசாத மரபுக் கவிஞர்கள் இலர் எனலாம். இத்தகைய சிறந்த தமிழின் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாடுவனவற்றைக் காண்போம்.<br>**வேறு துணை உண்டோ?**<br>**“செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**<br>**செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்!”**<br>❖ சிவந்த சூரியன் மாலையில் மலை உச்சியில் சென்று மறைவான்<br>❖ சிவந்த நிறத்தை உடைய பூக்கள் நிறைந்த காடு ஆகும்.<br>❖ வானம் முழுவதும் சூரியனின் செந்நிறத்தைப் போல உழைக்கும் உழைப்பாளர்களின் கரங்கள் சிவந்து துன்பத்தை அடைய, தொழிலாளர்களின் வியர்வையாகிய வெள்ளம் தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது முத்துக்களைப் போல் அமர்ந்திருக்கும்.<br>❖ இத்தகைய சிறப்பை எல்லாம் வியந்து பாட எனக்கு உன்னை விட்டால் வேறு சரியான துணை உண்டோ சொல்வாயாக! என்று தமிழின் துணை வேண்டும் என்று பாடுகிறார்.<br>**பொதிகைத் தென்தமிழ்:**<br>❖ கவிஞர்களின் மனதில் பொங்கி வருகின்ற கவிதை எண்ணத்திற்கு உணவாய் எங்கள் முத்தமிழே! நீ உள்ளாய்.<br>**“பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!**<br>**பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்!”**<br>❖ பாண்டிய மன்னர்கள் போற்றிய சங்கப்பலகையில் நடுநாயகமாக உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்து இருந்தாய்.<br>❖ பாரி, காரி, ஓரி, ஆய், பேகன், நள்ளி, அதியன் போன்ற கடையேழு வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்!<br>**சங்கத்தமிழே வா!**<br>**“மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு**<br>**மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!”**<br>❖ மொழிக்குப் பெருமை சேர்க்க மீண்டும் அந்தப் பழமை நலம் புகுத்துவதற்கு உடல் சிலிர்க்கும் படி தமிழாகிய குயிலே வா! கூவி வா!<br>❖ கூண்டு அதனை உடைத்து எழுந்த சிங்கம் போலப் பொதிகை மலையில் தோன்றிய தமிழே ஆற்றலுடன் விரைந்து வா! என்று தமிழின் சீரிளமைத் திறம் குறித்துச் சிற்பி பாலசுப்ரமணியம் வியந்து கூறுகிறார்.<br>**முடிவுரை:**<br>**“உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!”**<br>காலத்திற்கு ஏற்றவாறு தம்மைப் புதுப்பித்துக்கொண்டும் இன்றளவும் சிறப்புற்றுத் திகழ்கின்ற தமிழின் திறத்தைக் கவிஞர் சிற்பி வியந்து பாடுகிறார். | 2<br><br>2<br><br>2 | 6 |

Padasalai.Net

**(அல்லது)**

ஆ) **முன்னுரை:**

**திரு + குறள் = திருக்குறள்**

**திரு** என்னும் சொல்லிலேயே மேன்மை பொருந்தியிருத்தலைக் காணலாம். தாஜ்மஹாலிலிருந்து ஒரு கல்லை எடுத்துவிட்டு, அதற்குச் சமமான ஒளியுடைய ஒரு கல்லைப் பொருத்தி விடலாம். ஆனால் திருக்குறளிலிருந்து ஒரு சொல்லை எடுத்துவிட்டு, அதற்குச் சமமான வேறொரு சொல்லைப் பொருத்த முடியாது என்பார் மதுரை இளங்குமரனார் அவர்கள். இத்தகைய சிறப்புடைய இந்நூல் ‘உலகப்பொதுமறை’ எனப் போற்றப்படுகிறது. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு காண்போம்.

**விண், மண்:**

**“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது”**

❖ தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாய்க் கொடுத்தாலும் ஈடாகாது.

**உலகம்:**

**“காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.”**

❖ உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப் பெரியதாகும்.

**கடல்:**

**“பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது”**

❖ இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

**பனை:**

**“தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்”**

❖ ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

**வாழ வழி:**

**“நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று”**

❖ ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று ; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது.

**“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு”**

❖ எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும். ஒருவர் செய்த உதவியை மறந்துவிட்டவருக்கு உய்வே இல்லை.

**முடிவுரை:**

செய்ந்நன்றி அறிதல் என்னும் தலைப்பின்கீழ் வள்ளுவரின் அரிய நற்கருத்துகளைக் கண்டோம். இதுவரை நாம் படித்ததிலிருந்து உணர்ந்தது என்னவெனில்,

“வள்ளுவரின் கருத்துகளைக் குறள்கள் என்று சொல்வதை விடவும் வாழ்க்கையின் சூத்திரங்கள் என்று

6

6

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | கூறுதல் மிகவும் பொருந்தும்"<br>ஆதலால் நாமும் செய்ந்நன்றி அறிதலின் பெருமையை உணர்ந்து, வள்ளுவனுக்கும் வள்ளுவன் குறளுக்கும் வணக்கம் செலுத்துவோம். | | |
| 45. | **அ)**<br>**புகார்க் கடிதம்**<br>**அனுப்புநர்**<br>ஊர்ப்பொதுமக்கள்,<br>நெ.1 பாரதியார் தெரு,<br>XXXX,<br>XXXX.<br>**பெறுநர்**<br>உயர்திரு. மின்வாரியப் பொறியாளர் அவர்கள்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>XXXX,<br>XXXX.<br>**மதிப்பிற்குரிய ஐயா,**<br>**பொருள் : தெருவில் அறுந்து விழுந்துள்ள மின் இணைப்புகளைச் சரி செய்தல் தொடர்பாக.**<br>வணக்கம். எங்கள் கிராமத்தில் சுமார் இரண்டாயிரம் வீடுகள் உள்ளன. சமீபத்தில் கஜா புயல் தாக்கத்தினால் எங்கள் வீடுகளுக்கு அருகில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டும், மின் கம்பிகள் அறுந்தும் கிடக்கின்றன. அவற்றைக் கடக்க முயன்ற இரு மாடுகள் மின் தாக்கத்தால் இறந்துவிட்டன. கிராமமே இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. போதிய மின்வசதி இல்லாத காரணத்தால் நோயாளிகள், வயதானவர்கள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தேர்வு நேரம் என்பதால் மின் துண்டிப்பினால் பள்ளி மாணவர்கள் தங்கள் தேர்வினை எதிர்கொள்ள மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே அருள்கூர்ந்து அறுந்து கிடக்கும் மின் கம்பிகளைச் சரி செய்து மீண்டும் மின்வசதி செய்து தர வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.<br>நன்றி.<br>இடம்: XXXX, இப்படிக்கு,<br>நாள் : 03.08.2019. தங்கள் உண்மையுள்ள,<br>ஊர்ப் பொதுமக்கள்.<br>**உறைமேல் முகவரி**<br>பெறுநர்<br>உயர்திரு மின்வாரியப் பொறியாளர் அவர்கள்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>XXXX,<br>XXXX. | 6 | 6 |
| | ஆ)<br>**முன்னுரை:**<br>மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் துளிர்க்கத் தொடங்கி விட்டது. மனிதனுடைய மேலாண்மைப் பண்பு, அவன் ஓய்வு நேரத்தை உருவாக்கத் தொடங்கியபோது உருவானது. இப்பகுதியில் நிருவாக மேலாண்மை குறித்து விரிவாகக் காண்போம்.<br>**நாலடியார் கூறும் நிருவாக மேலாண்மை:**<br>❖ உயர்பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாய் இருப்பது சாத்தியமில்லை.<br>❖ ஆனால், யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக்கொண்டால் போதும். தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு. இதையே, நாலடியார், | 6 | 6 |

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | **“கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**<br>**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்**<br>**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு**<br>**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு”** என்று பக்குவமாய்க் கூறுகிறது.<br>**கையேந்தும் அவலநிலை:**<br>❖ நிருவாகத்தின் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன் அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.<br>**ஷேக்ஸ்பியரின் நாடகத்தின் நிதி மேலாண்மை:**<br>❖ ‘டைமன்’ என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். அவன் வரவு குறைந்தாலும் செலவு நீட்டித்தது.<br>❖ அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றிப் பேசவருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தார்.<br>❖ ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனால் அப்போதும் அவன் வருந்தவில்லை. தான் அளித்த விருந்தை உண்டவர்கள், உதவுவார்கள் என்று பொய்க்கணக்குப் போடுகிறான்.<br>❖ அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் சென்று வெறும் கையோடும், வெளிறிய முகத்தோடும் திரும்புகிறார்கள். அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான்.<br>❖ ‘டைமன்’ கடைசியில் மனித இனத்தை வெறுக்கிறான். ஷேக்ஸ்பியரின் இந்நாடகம் நிதி மேலாண்மை பற்றிய மிகச் சிறந்த வாழ்வியல் நாடகமாகும்.<br>**ஔவையாரின் நிருவாக மேலாண்மை:**<br>❖ ஔவையார், “நல்வழியில் ஈட்டும் பொருளினைவிட அதிகமாய்ச் செலவு செய்பவர்கள் பிற்காலத்தில் தங்கள் மானத்தையும் அறிவினையும் உணர்வையும் இழப்பார்கள்” என்று அறிவுறுத்துகிறார்.<br>**“ஆன முதலில் அதிகம் செலவானால்**<br>**மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை**<br>**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்**<br>**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு”** என்ற பாடல் மூலம் ஔவையார் நிதி மேலாண்மையை விளக்குகிறார்.<br>❖ மேலாண்மை என்பது வெறும் புத்தக அறிவுடன் முடிந்துவிடுவதன்று, நொடிக்கு நொடி சூழல்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றன.<br>❖ இப்போதெல்லாம் பல நிறுவனங்களில் ‘முன் அனுபவம்’ என்பது எதிர்மறையாகிவிட்டது. அனுபவசாலிகள் செக்குமாடாய் இருப்பார்கள் என்று எண்ணி, ஜல்லிக்கட்டுக் காளைகளான இளைஞர்களையே தேர்வு செய்கிறார்கள்.<br>**முடிவுரை:**<br>வரவுக்கு மீறி செலவு செய்பவர்கள் பெரும் மன அழுத்தத்திற்கு ஆளாவார்கள். இந்தச் சமுதாயத்தாரால் புறக்கணிக்கப்படுவார்கள். எனவே வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும் என்பதனை வெ. இறையன்பு வலியுறுத்துகிறார். | | |
| 46. | **அ) கோடைமழை கதைவாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.**<br>**முன்னுரை:**<br>குழந்தைகள் பெற்றோரால் கொண்டாடப்படுகிறார்கள். பெற்றோர் என்ற சொல்லே ‘பேறு பெற்றோர்’ என்ற பொருள் | | 6 |

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

கொண்டதுதான் எனலாம். தாய், தந்தை இல்லாத ஏதிலிக் குழந்தைகளின் நிலை மிகக் கொடியதாகும். ½
அக்குழந்தைகளை ஏற்று வளர்க்கும் மனிதப் பண்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. இப்பண்பை வெளிப்படுத்தும் 'சாந்தா தத்' அவர்களின் 'கோடை மழை' கதை நம்மை நெகிழ வைக்கிறது.

**கதைச்சுருக்கம்:**

ஆறுமுகம் என்ற முதியவருக்குத் தன் பேரப்புள்ளையே உலகம். தன் மகனையும் மருமகளையும் ½
இழந்த பின்பு பச்சைமண்ணுக்காக அவதிப்படுகிறார் ஆறுமுகம். உனக்கு நான் எனக்கு நீ என்றாகிவிட்ட நாதியற்ற அவஸ்தை. இந்த அரவணைப்பு இதற்கு இன்னும் எத்தனை நாட்களுக்கு --- தனக்குப் பிறகு! இந்தக் குழந்தைக்காக் இன்னும் நிறைய நாள் உசிரோட இருக்கனும்னு எனக்கும் ஆசைதான். சாவோட மல்லுக்கு நிக்குற வயசா? அப்ப இதனோட கதி என்னாகும்? அனாதையா விட்டுட்டுப் போறது எவ்வளவு பெரிய பாதகம் என்று சிந்தித்துக் குழந்தையைத் தத்துக் கொடுக்க மனம் ஒப்பாமல் முடிவெடுத்தார் ஆறுமுகம்.

**என் மனம் கவர்ந்த கதை மாந்தர்:**

தன் இறுதி காலத்திலும் தனக்கென வாழா பிறருக்கென வாழும் தன்மை கொண்ட ஆறுமுகமே என் ½
மனம் கவர்ந்த கதை மாந்தர் ஆவார்.

**ஆறுமுகத்தின் நிலை:**

**"கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்"**

Padasalai.Net

கைக்குழந்தையை விட்டுவிட்டு, நான்கு நாள் காய்ச்சலில் கட்டியவள் கண் மூடியபின், வாழப் பிடிக்கவில்லையென்று ஆறுமுகத்தின் மகனும் விஷயத்தை விழுங்கிப் போய்ச் சேர்ந்துவிட்டான். ஆறு மாதம் அந்தப் ½
பச்சை மண்ணுடன் அவதிப்பட்டார், ஆறுமுகம். 'உனக்கு நான், எனக்கு நீ" என்றாகிவிட்ட நாதியற்ற அவஸ்தை. தகப்பனையும் பிள்ளையையும் பாதுகாக்க வேண்டியவன் இருவரையும் நட்டாற்றில் விட்டுவிட்டுத் தன் வழியே சென்றுவிட்டான்.

**முதியவரின் நிலைப்பாடு:**

**"தந்தை மகற்காற்றும் உதவி"**

ஆனால், ஆறுமுகம் அப்படியில்லை. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாய் நிழலாய் இருந்த தன் மனைவி, ½
பூமியில் தன் கணக்கை முடித்துக்கொண்டபின் சிதையில் அவர் விழவில்லை; மகனுக்காக வாழ்ந்தார். ஒற்றை ஆளாய் வளர்த்து ஆளாக்கி, வேலையில் அமர்த்தி, அவனுக்கு ஒரு குடும்பத்தையும் உருவாக்கிக் கொடுத்தார். ஆனால், அவனோ கைக்குழந்தையோடு ஆறுமுகத்தைத் தவிக்கவிட்டுப் போய்விட்டான்.

**மருத்துவமனையில் ஆறுமுகம்:**

மூன்று நாள்களாய்க் காய்ச்சல், சளியென்று சிரமப்பட்ட கைக்குழந்தையை மருத்துவமனைக்குத் தூக்கிச் ½
சென்று, நீண்ட வரிசையில் கைவலிக்கக் காத்திருந்து, ஊசி

போட்டு, மருந்து எழுதி வாங்கி வந்தார், ஆறுமுகம்.

**ஆறுமுகத்தின் முடிவு:**

**"பிடித்தவர்களைப் பிரிந்து வாழ முடியும்**
**ஆனால் மறந்து வாழ முடியாது"**

மருந்துச்சீட்டோடு வந்த ஆறுமுகம், நீண்ட நாள்களாய் அந்த மருந்துக்கடை பாபு சொன்னதை யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தார். தள்ளாத வயதில் இருக்கும் தன் காலத்திற்குப் பிறகு குழந்தையின் நிலைமை என்னவாகும் என யோசித்துத்தான் குழந்தையைத் தத்துக் கொடுக்க முடிவு செய்தார், ஆறுமுகம். பாபுவிடம், குழந்தையைத் தத்து எடுக்க, மறுநாளே அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிடச் சொன்னார், அவர். ½

**தாய்பாசம்:**

**"அம்மா என்று அழைக்காத உயிரில்லையே"**

"அம்மா என்கிற பாசமே தெரியாமல் இருக்க இதுமட்டும் என்ன பாவம் செய்தது? பெண்ணோட பரிவும் பாசமும் ஒரு குழந்தைக்கு எவ்வளவு முக்கியம்னு இப்பதான் நல்லாப் புரிஞ்சது. பாபு, இதைப் பிரிஞ்சிருக்க முடியாதே என்கிற என்னோட சுயநலத்துக்காக இதை அநாதையா விட்டுவிட்டுப் போறது எவ்வளவு பெரிய பாதகம்!" என்று மனிதநேயத்துடன் மனம் திறந்தார், ஆறுமுகம். ½

மறுநாள் பாபுவுடன் வந்த அவர்கள், முறைப்படி குழந்தையைத் தத்து எடுத்தனர். குழந்தையைப் பெற்றுக்கொண்ட கணவனின் முகத்தில் ஏக்கம், தவிப்பு, எதிர்பார்ப்பு ஆகிய அத்தனையும் தெரிந்ததைப் பார்த்த ஆறுமுகம், விழிநீரைப் பிடிவாதமாய், வந்த வழி அனுப்பி வைத்தார்.

Padasalai.Net

**வந்தவரின் பரிவு:**

**"குணம் பெரிதேயன்றி குலம் பெரிதல்ல"**

அப்போது, குழந்தையைத் தத்து எடுத்த கணவன், "ஐயா! ரொம்பப் பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்திருக்கீங்க. நீங்களும் எங்களோட வந்துடுங்கய்யா"! என்றான். ½

குழந்தையைப் பிரிந்த அந்த முதியவர் அனாதையாகிவிடக்கூடாது என்பதற்காகக் குழந்தையோடு சேர்த்து அவரையும் தத்தெடுக்கும் மனிதநேயப் பண்பினை வெளிப்படுத்துகிறார், ஆசிரியர்.

இது போன்ற சிந்தனையும் பெருந்தன்மையும் இருந்தால் ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்கள் ஆகியோரின் எண்ணிக்கை இச்சமூகத்தல் குறைந்துவிடும் என்பதை வெளிப்படுத்துகிறது. இக்கதை.

**கதை மாந்தரின் நற்பண்புகள்:**

- ❖ தனக்கென வாழா பிறருக்கென வாழும் தன்மை
- ❖ பிள்ளைப் பாசம்
- ❖ வாழ்க்கையில் போராடும் மனம் ½
- ❖ மனப் பக்குவம்

**கதை மாந்தர் உணர்த்தும் நீதி:**

"பிறருக்குக் கொடுத்து வாழும் நெஞ்சம் உன்னிடம்
இருந்தால் பிறரைக் கெடுத்து வாழும் எண்ணம் உன்னிடம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | இருக்காது”<br>**முடிவுரை:**<br>**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்<br>தெய்வத்துள் வைக்கப்படும்.”**<br>குழந்தையைத் தத்தெடுக்க வந்தவர்கள் இறைஞ்சும் தன்மையில் கேட்டதும் ஆறுமுகம் அதிர்ந்து போனார். யாருக்கு யார் உதவி? மலை போன்ற அத்தனை பிரச்சனைகளும் எப்படி இப்படி ஒரே நாளில் தீர்வு கண்டு குழந்தையுடன், தன்னையும் சுவீகரித்துக் கொண்டு என எண்ணியபடி கண்ணீருடன் கைகூப்பினார் ஆறுமுகம். பெற்றோர் இல்லாத பிள்ளைகளும் பிள்ளைகள் இல்லாத பெற்றோரும் ஏதிலி நிலையில் தவிப்பவர்கள்தான். அவர்களையும் ஏற்று அரவணைக்கும் இக்கதைமாந்தர் போல் இருந்தால் மனிதநேயம் மேம்படும். | ½<br>½ | |
| | **ஆ) முன்னுரை:**<br>**“விவசாயம் என்பது வியாபாரம் அல்ல<br>வாழ்க்கை முறை – நம்மாழ்வார்”**<br>கிராமத்தில் வாழக்கூடிய மனிதர்களுக்கும் நிலங்களுக்குமான உறவுமுறை முதன்மையானதாகும். நிலம் சடப்பொருள் அல்ல. நிலத்தோடு பேசக்கூடிய மனிதர்கள் இன்றைக்கும் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வெக்கை நிறைந்த கரிசல் மண்ணில் அடமானம் வைத்த தன் நிலத்தை மீட்க முடியாமல் தன் மண்ணை விட்டுப் பிரிந்து செல்லும் துயரத்தை இக்கதை பதிவு செய்கிறது.<br>**கதை மாந்தர்கள்:**<br>❖ முத்தையன் + முத்தையன்தாய் மூன்று பிள்ளைகள்<br>❖ அவன் பெண்டாட்டி (மூக்கம்மா)<br>❖ வெள்ளைச்சாமி<br>❖ அவன் மனைவி<br>❖ குழந்தை<br>❖ மேலூர் பங்காருசாமி / மனைவி<br>❖ கொராமுனுசு (கிராம நிர்வாக அலுவலர்)<br>**பாகப்பிரிவினை:**<br>**“வளர்த்த கிடா மார்பில் பாயும்”**<br>முத்தையனும் வெள்ளைச்சாமியும் உடன்பிறந்த சகோதரர்கள். முத்தையனின் மனைவி மூக்கம்மாள், வெள்ளையனுக்கு அண்ணியாக இல்லாமல் அன்னையாக இருந்தாள்.<br>வெள்ளைச்சாமிக்குத் திருமணமானதும், அவன் மனைவி பேச்சைக் கேட்டு, சொத்தில் பங்கு கேட்டான். பாகம் பிரிக்கும் போது தன் அண்ணன் முத்தையனை எடுத்தெறிந்து பேசினான். தன் தம்பிதானே! பேசிட்டுப் போறான் என்று முத்தையன் நினைத்தாலும், அவன் பேசிய பேச்சு நெஞ்சில் முள்ளாய்க் குத்தியது. வளர்த்த கிடா மார்பில் பாய்ந்து ரணமானது அவன் மனசெல்லாம்.<br>**நம்பிக்கைக்கிரயம்:**<br>வெள்ளைச்சாமி இரண்டு வருடங்களுக்கு முன்னர் மேலூர் பங்காருசாமியிடம் இருநூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தான். வட்டிக்கு ஈடாக ஆறுமாதத்திற்கு முன்பு தன் நிலத்தை நம்பிக்கைக்கிரயமாக பங்காருசாமிக்கு எழுதிக் கொடுத்தான்.<br>**முத்தையனின் தீராக் கோபம்:**<br>தம்பி வெள்ளையன் தன் நிலத்தை பங்காருசாமிக்கு நம்பிக்கைக்கிரயம் எழுதிக் கொடுத்தது பற்றி மூக்கம்மாள் | 8 | 8 |

Padasalai.Net

முத்தையனிடம் கூறினாள். வெள்ளைச்சாமி பேசிய பேச்சு முத்தையனின் மனதில் ஆறாத வடுவாய் இருந்ததால், அவன் தம்பிக்கு உதவ மறுத்துவிட்டான்.

**அண்ணன் தம்பி இணையாதிருந்தால்...**

**பங்காருசாமி நிலத்தைக் கையகப்படுத்துதல்:**

**"ஆளைக் கண்டு ஏமாற்றுமாம் ஆலங்காட்டு நரி"**

ஊரில் விதைப்பு நேரம் என்பதால் அனைவரும் மும்மரமாய் விதைத்து கொண்டிருந்தனர். ஆனால், வெள்ளைச்சாமியோ பங்காருசாமியிடம் கைகட்டி கண்ணீருடன் நின்று கொண்டிருந்தான். வாங்கிய பணத்தை எப்படியாவது அடுத்த ஆண்டிற்குள் தந்துவிடுவதாகவும் நிலத்தைத் தன்னிடம் திருப்பித் தருமாறும் பங்காருசாமியிடம் கெஞ்சினான். ஆனால், பங்காருசாமியோ எதையும் காதில் வாங்காமல், "'யானை வாய்க்குள் போன கரும்பு, திரும்பாது' அது போல நிலத்தைத் தன் பெயருக்கு மாற்றி எழுதிக் கொண்டிருந்தார்.

**வெள்ளைச்சாமியின் கதறல்:**

**"உழுகிற மாட்டை நுகத்தால் அடித்தாற் போல"**

மண்டியிட்டு கடவுளிடம் கதறி அழுத பக்தனைப் போல, வெள்ளைச்சாமி நிலத்திலே நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கதறி அழுதான். பூமித்தாயே! இதுவரை என் குடும்பத்தக் காப்பாத்தினியே! இன்னிக்கு உன்னக் காப்பாத்தாம பறிகொடுத்து நிக்குறனே! என்ன மன்னிச்சிரும்மா. உன்னவிட்டா எனக்கு வேற யாரு இருக்கா? நான் என்ன செய்வேன்னு தெரியலையே? என்று வெள்ளையன் புலம்பி அழுதான்.

**வெள்ளைச்சாமி ஊரைவிட்டு வெளியேறுதல்:**

**"உழுதவன் கணக்குப் பார்த்தால்**
**உழக்கால் தடியும் கூட மிஞ்சாது"**

தன் மண்ணைவிட்டு அகலும் ஏதிலியாய், சோகத்தைச் சுமந்து கொண்டு எங்கு செல்வதென்று தெரியாமல் கனத்த மனத்துடன் வெள்ளைச்சாமி தன் சொந்த மண்ணைவிட்டுப் பிரிந்து சென்றான்.

Padasalai.Net

**கண்ணீர்ப்பூக்கள்:**

வெள்ளைச்சாமி பரபரப்பான ஒரு நகரத்தின் மூலையில் தினக்கூலியாக வாழ்க்கையைக் கழித்து வருகிறான். அவனின் மகன் தொட்டியிலே மண்ணை நிரப்பி ஒரு செடியை நட்டு நீர் ஊற்றிக் கொண்டிருந்தான். வெள்ளையனின் மனைவி, சொன்ன வேலையைச் செய்யாம என்ன செஞ்சிட்டு இருக்க? என்று மகனைத் திட்டிய போது, வெள்ளையன் அவனைத் திட்டாதே, அவனுக்கினு சொந்தமா இருக்கிறது இந்த மண்ணு மட்டுந்தான் என்று கூறிக் கண் கலங்கி, செடியில் பூ பூக்கும் முன்பே அவன் கண்களில் கண்ணீர் பூத்தன.

**கதை உணர்த்தும் நீதி:**

**"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**
**ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே"**

**முடிவுரை:**

**"விவசாயம் காப்போம் நீர்நிலைகளை மீட்போம்"**

மண் என்பது வெறும் மண்மட்டும் அல்ல; அது பண்பாடு; வாழ்க்கையின் அங்கம். வருவாய் பெரிதாக வரவில்லையென்றாலும் நில உரிமை, நிலம் சார்ந்த வேளாண்மை ஆகியவற்றை ஒரு பண்பாடாகவே கொண்டிருந்த மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| | பகுதி - V<br>**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** | | **4+2 = 6** |
| 47. | **அ) தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்**<br>ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி<br>ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்<br>மின்னேர் தனியாழி வெங்கதிரோன்(று) ஏனையது<br>தன்னேர் இலாத தமிழ்!<br>**- தண்டி**<br>**பா வகை: நேரிசை வெண்பா** | 4 | 6 |
| | **ஆ)** மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய<br>பிறத்தல் அதனான் வரும். | 2 | |

ஆக்கம்
தமிழ்த்துறை
ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
சக்கராம்பாளையம்,அகரம் அஞ்சல், எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 637202.
CELL : 99655-31727, 94432-31727

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com





# ஸ்ரீ வித்யபாரதி

## மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி (TM/EM)

சக்கராம்பாளையம், எலச்சிபாளையம், திருச்செங்கோடு (வ), நாமக்கல் (மா) - 637 202.

CELL: 99655 31727, 9965535967, 9442288402, 8072668664

www.shrividhyabharathi.com Email : vidhyabharathi.123@gmail.com

## தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு - டிசம்பர் - 2024

# மாநிலத்தில் முதல், இரண்டு மற்றும் மூன்றாவது இடம் பிடித்து சாதனை



சென்னகேசவன் நா
Roll. No: 223125164

100/100



தக்ஷயா மு
Roll. No: 223125225

100/100



| மதிப்பெண் | பெயர் | Roll. No |
|---|---|---|
| 99/100 | சுதீக்ஷா செ | Roll. No: 223125243 |
| 99/100 | கவிலேஷ் மோ | Roll. No: 223125152 |
| 98/100 | ஹாசினி ச | Roll. No: 223125174 |
| 97/100 | பிரகல்யா ரா ப | Roll. No: 223125222 |
| 96/100 | அனிசா செ | Roll. No: 223125233 |
| 96/100 | சுருபீகா மு ஈ | Roll. No: 223125218 |
| 96/100 | நிதிஶ்ரீ ரா | Roll. No: 223125206 |
| 96/100 | தர்ஷனா க | Roll. No: 223125196 |



| மதிப்பெண் | பெயர் | Roll. No |
|---|---|---|
| 95/100 | பிரணிஷா க | Roll. No: 223125220 |
| 95/100 | தியா சண்ஷிதா யு | Roll. No: 223125179 |
| 95/100 | நிஷாந்த் கோ த | Roll. No: 223125116 |
| 94/100 | வர்ஷிதா ச | Roll. No: 223125235 |
| 94/100 | மௌமிதா கோ | Roll. No: 223125221 |
| 94/100 | அனந்தஶ்ரீ வெ | Roll. No: 223125178 |
| 94/100 | விஷாந்த் கா | Roll. No: 223125111 |

+1 மாணவ மாணவிகளுக்கான தமிழ் திறனறித் தேர்வில் மாநில அளவில் அதிக எண்ணிக்கையில் ரூ. 36,000/- உதவித்தொகை பெற வைத்த ஒரே பள்ளி.

**17 மாணவ - மாணவிகள் மாநில அளவில் தகுதி பெற்று சாதனை**

# வாழ்த்துகிறோம்...

**2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான 11TH, 12TH அட்மிஷன் முன்பதிவு நடைபெறுகிறது.**

## 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு !!!

11ஆம் வகுப்பிற்கான நுழைவுத் தேர்வு (Entrance Exam) நடைபெறும் நாள் 26/01/2025, மற்றும் 02/02/2025 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொண்டு 11ஆம் வகுப்பு சேர்வதற்கான Scholarship பெற்று பயனடையுமாறு பள்ளி நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு,தமிழ் திறனறி தேர்வின் மூலமாக தமிழக அரசால் வழங்கக்கூடிய 36000/- Scholarship ரூபாய் பெற பயிற்சிகள் வழங்கப்படும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## தமிழகத்தில் தமிழ் திறனறித் தேர்வில் அதிக மாணவர்களை வெற்றி பெற வைத்து சாதனை

+1 மாணவர்களுக்கான மாநில அளவிலான தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வில் 20 பேர் தேர்ச்சி பெற்று Rs. 36,000/- ஊக்கத்தொகை பெறுவதற்குத் தேர்வாகியுள்ள ஸ்ரீ வித்யபாரதி சாதனையாளர்கள்

## தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு - அக்டோபர் - 2023



| ஸ்ரீநிதி பா | கீர்த்திகா வெ | தேவானந்த் ப | முகேஷ்குமார் மு |
|---|---|---|---|
| 99/100 | 99/100 | 99/100 | 99/100 |
| STATE 2nd RANK | STATE 2nd RANK | STATE 2nd RANK | STATE 2nd RANK |
| Reg. No. 223120297 | Reg. No. 223120352 | Reg. No. 223120274 | Reg. No. 223120241 |



| Name | Mark | Reg. No. |
|---|---|---|
| லத்திகா இ | 98 | STATE 3rd RANK Reg. No. 223120282 |
| ஜீவனிகா சி பு | 97 | Reg. No. 223120345 |
| நிஷாந்த் செ | 97 | Reg. No. 223120260 |
| சம்ரிதா ர | 97 | Reg. No. 223120291 |
| ஸ்ரீஹரிணி மோ | 96 | Reg. No. 223120316 |
| கௌதம் ப | 96 | Reg. No. 223120246 |
| அனிஷ்கா ரா ச | 95 | Reg. No. 223120334 |
| வர்ஷா பெ | 94 | Reg. No. 223120310 |
| லோனா ஆக்னஸ் பெ | 94 | Reg. No. 223120288 |
| தநேயா கா | 94 | Reg. No. 223120338 |
| ஹரினிஸ்ரீ மா | 93 | Reg. No. 223120340 |
| சஞ்சய் பாரதி அ சு | 93 | Reg. No. 223120281 |
| வர்ஷினி அ ப | 93 | Reg. No. 223120314 |
| சுபிக்ஷா சு | 93 | Reg. No. 223120306 |
| சன்மதி அ ச | 93 | Reg. No. 223120293 |
| ஸ்ரீஹர்சினி மோ | 92 | Reg. No. 223120319 |

## தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு - அக்டோபர் - 2022



| Mark | Name | Reg. No. |
|---|---|---|
| 95/100 | திபிக்ஷா ல த | Reg. No. 0551190412 |
| 89/100 | அனுஸ்ரீ த | Reg. No. 0551190377 |
| 88/100 | திஷ்யா செ | Reg. No. 0551190415 |
| 87/100 | சரவணன் பா | Reg. No. 0551190285 |
| 87/100 | சர்வேஸ் கோ த | Reg. No. 0551190286 |
| 85/100 | சர்விகா சு | Reg. No. 0551190397 |
| 83/100 | மிதுன்குமார் வெ ஞா | Reg. No. 0551190340 |
| 81/100 | ரோகித் ம | Reg. No. 0551190360 |
| 81/100 | நவினா த | Reg. No. 0551190417 |
| 81/100 | ரால்மிகா பு ரா | Reg. No. 0551190441 |
| 80/100 | பிரித்திகா மோ ம | Reg. No. 0551190427 |

# SVB ஸ்ரீ வித்யபாரதி
## நீட் பயிற்சி மையம் TM / EM

**2023-2024 ஆம் கல்வியாண்டில் தமிழ் வழியில் பயின்ற மாணவி**

**மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை**

**STATE 1ST ROOBIKA P TAMIL MEDIUM-7.5%**

**669 / 720**




**2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான CRASH COURSE, REPEATER அட்மிஷன் நடைபெறுகிறது**

**ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனி விடுதி வசதி உண்டு.**

**MOBILE : 99655 31727, 9965535967, 94422 88402, 94428 94471, 8122169221**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# SVB NEET/JEE COACHING CENTRE

(English Medium & Tamil Medium)

SAKKARAMPALAYAM, AGARAM POST, ELACHIPALAYAM,
TIRUCHENGODE TK, NAMAKKAL DT - 637 202, TAMIL NADU.

CELL : 99655 31727, 94422 88402, 94428 94471, 99655 35967, 8122169221

# மாநிலத்தில் முதலிடம்




2023-2024 ஆம் கல்வியாண்டில் தமிழ் வழியில் பயின்ற மாணவி மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை

**TAMIL MEDIUM - 7.5%**

**STATE 1ST**

மாநிலத்தில் முதலிடம்

| | | |
|---|---|---|
| BOTANY | - | 180/180 |
| ZOOLOGY | - | 180/180 |
| CHEMISTRY | - | 162/180 |
| PHYSICS | - | 147/180 |




MADRAS MEDICAL COLLEGE (MMC)
CHENNAI

**669/720**

ROLL NO : 4108100175
APP NO : 240410091033

**ENGLISH MEDIUM 92.5%**

**695/720**






நாமக்கல் மாவட்டத்திலேயே குறைந்த கல்விக் கட்டணத்தில் CRASH COURSE, 1 YEAR NEET REPEATERS, RE-REPEATERS

Kindly Send Me Your Study Materials To Our Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

MBBS
ROOBIKA P
MADRAS MEDICAL COLLEGE (MMC), CHENNAI

MBBS
BARANITHARAN S
STANLEY MEDICAL COLLEGE,CHENNAI

MBBS
NITHIYAPRAGASH R
GOVERNMENT MEDICAL COLLEGE, PUDUKOTTAI

MBBS
NAGARAJAN E
VENKATESHWARA MEDICAL COLLEGE, CHENNAI

MBBS
HARIHARAN S
VENKATESHWARA MEDICAL COLLEGE, CHENNAI

MBBS
KRISHNA KAARUNYA E
KARPAGAM FACULTY OF MEDICAL, COIMBATORE

MBBS
JOSHVA NIMAL L
PSG INSTITUTE OF SCIENCES, COIMBATORE

MBBS
KIRUTHIKA S
MELMARUVATHUR ADHIPARASAKTHI INSTITUTE

MBBS
M.R.DHANISHYA
MUTHUKUMARASAMY MEDICAL COLLEGE

MBBS
DEVASREE A
VENKATESHWARA MEDICAL COLLEGE, CHENNAI

BDS
VASANTHKUMAR T
PRIYADHARSHINI DENTAL COLLEGE &HOSPITAL,CHENNAI

MBBS
INBARAJAN V
INDIRA MEDICAL COLLEGE, TIRUVALLUR

MBBS
SANTHOSH M
GOVT. MEDICAL COLLEGE, MADURAI

MBBS
VISHWESHWARAN G
GOVT. MEDICAL COLLEGE, KOVAI

MBBS
SUNIL KUMAR K
GOVT. MEDICAL COLLEGE, MADURAI

MBBS
DHARANEESH M R
GOVT. MEDICAL COLLEGE, NAGAPATTINAM

MBBS
AISHWARYA S
VINAYAGA MISSIONS, SALEM

MBBS
RAMKI R
PSV MEDICAL COLLEGE, KANCHEEPURAM

MBBS
SUKUMAR L
STANLEY MEDICAL COLLEGE, CHENNAI

MBBS
DHARINEESH V
VIVEKANANDHA MEDICAL CARE HOSPITAL, TIRUCHENGODE

MBBS
MAITHILI C
GOVT. MOHAN KUMARAMANGALAM MEDICAL COLLEGE, SALEM

MBBS
NIVEDHA K
GOVT. MEDICAL COLLEGE, THANJAVUR.

MBBS
RAGHULPRANAV S
GOVT. MEDICAL COLLEGE, DHARMAPURI

MBBS
MANIVASAGAM R
K.A.P.V GOVT. MEDICAL COLLEGE, TRICHY

MBBS
PERIYARNITHI M
K.A.P.V GOVT. MEDICAL COLLEGE, TRICHY

MBBS
BHUVANARAGAVAN M
GOVT. MEDICAL COLLEGE, THOOTHUKUDI

MBBS
R.KISHORE
GOVT. MOHAN KUMARAMANGALAM MEDICAL COLLEGE, SALEM

MBBS
R.S.MIRUTHULA
GOVT. MEDICAL COLLEGE, VELLORE

MBBS
KATHIRESAN V
GOVT. MEDICAL COLLEGE, KARUR

MBBS
SHARJITH S
GOVT. MEDICAL COLLEGE, KOVAI

MBBS
DHANYAPRIYA K
GOVT. MEDICAL COLLEGE, KOVAI

MBBS
AASIKA N
JKKN DENTAL COLLEGE, KOMARAPALAYAM

MBBS
PRANAV K
VELAMMAL MEDICAL COLLEGE, MADURAI

MBBS
DEEPIKA R
VELAMMAL MEDICAL COLLEGE, MADURAI

MBBS
SUREKHA S
KARAIKUDI CHETTINAD MEDICAL COLLEGE, CHENNAI

MBBS
VASANTHAKUMAR S
GOVT. MOHAN KUMARAMANGALAM MEDICAL COLLEGE, SALEM

MBBS
PRADEESH M
VINAYAKA MISSION MEDICAL COLLEGE, KARAIKAL

MBBS
LOKESHWARAN S
GOVT. MEDICAL COLLEGE, VELLORE

MBBS
ARUNKUMAR M
GOVT. MEDICAL COLLEGE, VIRUDHUNAGAR

MBBS
M.HRISHRAJ
GOVT. MEDICAL COLLEGE, ARIYALUR

MBBS
KALAIVANI A
SRI MUTHUKUMARAN MEDICAL COLLEGE, CHENNAI

MBBS
SAKTHINEHA R
KARPAGAM MEDICAL COLLEGE, KOVAI

MBBS
NAGARAJ G
INDIRA GANDHI GOVT. MEDICAL COLLEGE, PUDUCHERRY

MBBS
SELVI.A
GOVT. MEDICAL COLLEGE, THOOTHUKUDI

MBBS
MONIKA S
GOVT. MEDICAL COLLEGE, VELLORE

MBBS
ANBARASAN B
VINAYAKA MISSION MEDICAL COLLEGE, KARAIKAL

MBBS
VARSHA S
GOVT. MEDICAL COLLEGE, VILLUPURAM

BDS
AJAYKUMAR T
RAJA DENTAL MEDICAL COLLEGE, TIRUNELVELI

BDS
YOGALAKSHMI M
DHANALAKSHMI SRINIVASAN DENTAL COLLEGE, PERAMBALUR

BDS
DHARSHINI C
BEST GENERAL MEDICAL COLLEGE, MADURAI

BDS
ARI P
PRIYADHARSHINI DENTAL COLLEGE, TIRUVALLUR

BDS
DHARSHINI S
VINAYAKA MISSIONS SANKARACHARIYAR DENTAL COLLEGE, ARIYANOOR

BDS
VIDHYA K
NAGA COLLEGE, PERUNDURAI

BSMS
SHRI DHAVA DHARSHINI
A.T.S.V.S SIDDHA MEDICAL COLLEGE, KANYAKUMARI

HARINI G
SHREE VENKATESHWARA COLLEGE OF PARAMEDICAL SCIENCE, ERODE

Padasalai.Net

**BOYS HOSTEL**



**GIRLS HOSTEL**



## CRASH COURSE
வகுப்புகள் தொடங்கும் நாள்
**26.03.2025**

**CLASSES STARTS FROM**
**26.03.2025**

## 2025 - 2026 ஆம் கல்வியாண்டிற்கான
## CRASH COURSE / REPEATER அட்மிஷன் நடைபெறுகிறது

**Tamil Medium 7.5% Students**
**Rs.15000 +Hostel Fee**

**English Medium 92.5% Students**
**Rs.20000 +Hostel Fee**

**CELL : 99655 31727, 94422 88402, 94428 94471, 8122169221.**

ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனி விடுதி வசதி உண்டு.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com